
யாரைத் திருமணம் செய்யலாம்?
அன்பு
பொருந்துதல்
மதிப்படிகள்
எதிர்காலம்
மகிழ்ச்சி
அவர்?
அன்பானவர்
வெளிபார்வை
நல்ல கேட்பவர்
குடும்பத்தை மதிப்பவர்
ஆதரவானவர்
அவள்?
நேர்மை
உண்மை
உடன் மகிழ்ச்சியாக இருப்பவர்
மனப்பார்வையுடன் நடப்பவர்
என் மதிப்டி பகிர்வவர்

# யாரை மணப்பது?

*R. ஸ்டான்லி, B.E., M.Tech.*

தங்கள் வாழ்க்கைத்துணையைத் தெரிந்தெடுக்கப் போதுமான ஆலோசனையும் உதவியுமின்றி எண்ணற்ற வாலிபர், நங்கையர் தவிக்கின்றனர். ஒன்றுக்கொன்று முரண்பட்ட இந்தியக் கலாச்சாரமும் மேலைநாட்டுக் கலாச்சாரமும் அவர்களைக் குழப்புகின்றன.

கடவுள்தாமே முதலாம் திருமணத்தை நடத்திவைத்தார். வாழ்க்கையின் போக்கையே நிர்ணயிக்கும் இக்காரியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவர் மீதும் அவரது அக்கறைக்கு அளவில்லை. ''அவசரக் கலியாணத்தையடுத்து அவதிதான்'' (Marry in haste, and worry at leisure!) என்று எங்கோ வாசித்தேன்! தவறான தெரிந்தெடுப்பை மாற்ற முடியாது. தேவனையும், நல்லாலோசனையையும் தள்ளிவிட்டுத் தாங்கள் எடுத்த தீர்மானங்களால் கண்ணீரில் மூழ்கியுள்ள வாலிபரும் கன்னியரும் ஏராளம்.

''விண்ணில்தான் திருமணம் நியமனம்!'' இது முற்றிலும் சரியானதொரு கூற்று என்பதற்கில்லை. மனிதனுக்குச் சுயசித்தமுண்டு. தனது தீர்மானங்களுக்கு அவனே பொறுப்பு. தேடாமல் தேவ சித்தம் தெரியாது. ''தேடுங்கள், கண்டடைவீர்கள்'' என்றார் இயேசு (மத்தேயு 7:7). கடவுளால் நியமிக்கப்படாத காரியத்தில் சாடிவிடாதபடி அவரது உதவியுடன் திருமண உணர்வுகள் பாதுகாக்கப்படவேண்டும். தவறான தெரிந்தெடுப்பின் இழப்புகளைச் சரிசெய்யக் கடவுளால் கூடும்; ஆனால் இன்னல் அதிகம்.

வாழ்க்கைத்துணையைத் தெரிந்தெடுப்பதில் குறைந்தது ஏழு காரியங்களைக் கவனிக்கவேண்டும் —

## 1. ஆன்மீக நிலை

விசுவாசி ஒருபோதும் அவிசுவாசியை மணக்கக்கூடாது. விவிலியத்தின் பழைய, புதிய ஏற்பாடுகள் இதை அழுத்திச் சொல்லுகின்றன. ''மாட்டையும் கழுதையையும் இணைத்து உழக்கூடாது'' (உபாகமம் 22:10). ''அவிசுவாசியுடன் விசுவாசிக்குப் பங்கேது?'' (2 கொரிந்தியர் 6:15). விசுவாசிகள் தேவனது பிள்ளைகள்; அவிசுவாசிகளின் தந்தையோ பிசாசு (யோவான் 8:42-44). விசுவாசியாகிய நீ ஓர் அவிசுவாசியை மணந்தால் உன் மாமனாரோடு உனக்கு எப்பொழுதும் பிரச்னைதான்!

அவிசுவாசிகள்தான் பெரும்பான்மையோர் (மத்தேயு 7:13). அவிசுவாசியான வாலிபரையும் நங்கையரையும் அவிசுவாசிகளுக்கு விட்டுவிடுங்கள். சிறுபான்மையான தமது பிள்ளைகளுக்குள் தேவன் உனது மணமகனை, மணமகளை வைத்திருக்கிறார். அவர்களுக்குள் அவரது வித்து உண்டு. அந்த ஆசீர்வாதத்தை இழந்துவிடாதே. மணமுடித்த பின் அவர்களைக் கிறிஸ்துவிடம் வழிநடத்திவிடலாமே என வாதாடுவோர் உண்டு! ஆனால் ஆயிரக்கணக்கானோர் பரிசுத்தமற்ற பிணைப்பினால் தங்கள் இரட்சிப்பின் மகிழ்ச்சியையே இழந்துவிட்டனர் தெரியுமா? ஒரு சிலர் மணமுடித்த பின் விசுவாசத்திற்குள் வந்திருக்கலாம்; ஆனால் இதை மாதிரியாகக் கொள்வது பேராபத்து.

திருமணத்திற்காகவே மாறிக்கொள்வது குறித்து எச்சரிக்கை! பொதுவாக இது நடிப்புதான். ராகேல் மீதுள்ள காதலால் யாக்கோபு இன்னும் ஏழு ஆண்டுகள் வேலை செய்யவும் ஒத்துக்கொண்டான்! காதலுக்காகவே திருமுழுக்கு



எடுத்துக்கொள்வோரும் உண்டு. இதெல்லாம் உதவாது, உண்மையாயிராது. உனக்காய்ப் பேசப்படும் நபரின் ஆன்மீக வாழ்வைக் குறித்து நன்கு தெரிந்த உள்ளூர் விசுவாசிகள் மற்றும் மூத்தோரிடம் கேட்டுத் தெரிந்துகொள்.

அந்நபர் மறுபடி பிறந்திருந்தாலும் வாழ்க்கையில் அவனது, அவளது விருப்பங்களைத் தெரிந்துகொள்ளுதல் நல்லது. உனது துடிப்பெல்லாம் ஊழியம்; அவளது விருப்பமெல்லாம் ஊதியம்; துலைந்தாய்! நீ ஆத்துமாக்களைத் தேடி அந்தமான் செல்ல விரும்புவாய்; அவள் ஆஸ்தியை நாடி அபுதாபி செல்லத் துடிப்பாள்!

## 2. உடல் தோற்றம்

மணமகன் அல்லது மணமகள் அழகாயிருக்கவேண்டுமென விரும்புவது தவறல்ல, அது இயல்பு. ஆபிரகாமின் மனைவி ''பார்வைக்கு அழகுள்ள'' பெண்ணாயிருந்தாள். ஈசாக்கின் மனைவி ''மகா ரூபவதியாயிருந்தாள்.'' யாக்கோபின் மனைவியாகிய ராகேல் ''ரூபவதியும் பார்வைக்கு அழகானவளுமாயிருந்தாள்.'' ''கரைதிரை முதலானவை ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள'' சபையை மணக்கவே கிறிஸ்து வருகிறார் (எபேசியர் 5:27). ஆனால் வெறும் அழகு ஏமாற்றிவிடும். ''எழில் ஏமாற்றும், அழகு அற்றுப்போகும்'' (நீதிமொழிகள் 31:30).

பெண்ணின் உடல் ஆரோக்கியமானதா எனத் தெரிந்துகொள்ளுதல் முக்கியம். எல்லா வேளையும் 100 சதவீதம் ஆரோக்கியம் எவருக்கும் கிடையாது. அதே வேளையில் இதய நோய் அல்லது சிறுநீரகக் கோளாறுள்ள ஒருவரை மணப்பது ஞானமல்ல. துயிலெழுதல், மகப்பேறு, குழந்தை வளர்ப்பு, வீட்டுப் பொறுப்புகள் இவை யாவற்றிற்கும் ஆரோக்கியமும் பலமும் தேவை. நீதிமொழிகள் 31:13-25ஐ

வாசித்துப்பார். பால்வினை நோய்ப் பரிசோதனை கேட்பது பண்பின்மை அல்ல. பரம்பரை வியாதிகள், மூளைக் கோளாறு போன்றவற்றைத் தவிர்க்க அந்தக் குடும்பத்தைக் குறித்த மருத்துவ வரலாற்றைத் தெரிந்துகொள்ளுதல் நன்று. நெருங்கிய உறவினரை மணக்கக்கூடாது. புள்ளிவிபர ஆராய்ச்சியின்படி இவ்விதத் திருமணங்களில் பிள்ளைகளுக்குப் பிறவி நோய்களும் குறைகளும் ஏராளம் என்று மருத்துவ ரீதியில் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஏதோ ஒரு பாட்டி, தாத்தாவின் விருப்பத்தை நிறைவேற்றப்போய் நமது பிள்ளைகள் அவதியுற வேண்டாம்.

உயரம் முக்கியமல்ல, ஆனால் பெண் தன்னைவிட உயரமாகவோ, அதிகக் குள்ளமாகவோ இருந்தால் பின்னர் ஒரு சில வாலிபர் மனச்சங்கடத்துக்குள்ளாகின்றனர்.

உடலழகையே முக்கியமாய்க் கருதினால் நல்ல தேவ பக்தியானதொரு பெண் உனக்குக் கிடைக்காமல் போகலாம்! அழகெல்லாம் தோலாழம்தான் என்பதை நினைவிற்கொள்!

### 3. கல்வி அறிவு

வாழ்க்கையின் முக்கிய தீர்மானங்களுக்குக் கணவனே பொறுப்பென்பதும், மனைவி அவனிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டுமென்பதும் திருமறையின் தாற்பரியம் (1 கொரிந்தியர் 14:35). ஞானமும் கல்வியும் ஒன்றல்ல; ஆனால் ஒருவருக்கொருவர் ஏற்படக்கூடிய உயர்வு, தாழ்வு மனப்பான்மையைத் தவிர்க்கவேண்டும். அறிவு நிலையில் ஓரளவாவது ஒப்புமை இருக்கவேண்டும். பள்ளி இறுதி யாண்டைக்கூட முடிக்காத பெண்களை மணந்துகொள்ளும் அதிகம் படித்த வாலிபர் பலர் பின்னர் வருந்துகின்றனர். இந்த ஏற்றத்தாழ்வினால் தங்கள் துணைவியோடு காரியங் களைப் பகிர்ந்துகொண்டு உரையாடுவதில் சிரமம் ஏற்



படுகிறது. நாளாவட்டத்தில் அப்படியே மனைவியைக் கண்டுகொள்ளாது, தனித்தியங்கத் துவங்கி விடுகின்றனர். தன்னால் ஒரு பயனுமில்லையென மனைவி தன்னைத் தானே நொந்துகொள்கிறாள். வாலிபனே, உனது வீட்டைக் கட்டக்கூடிய ''புத்தியுள்ள'' பெண்ணைக் கண்டுகொள்ள இறைவனிடம் வேண்டிடு (நீதிமொழிகள் 14:1).

அதே வேளையில், அதிகம் படித்த பெண்களுக்கு வீட்டில் இல்லக்கிழத்தியாயிருக்க முடிவதில்லை. கணவருக்கும் பிள்ளைகளுக்கும் எப்பொழுதும் அன்பைச் சொரியப் புத்துணர்வுடன் வீட்டில் இருக்கவேண்டுமென்பது பெண்களைக் குறித்த தேவனது திட்டமாகும் (தீத்து 2:4,5). ஆனால் இன்றையப் பொருளாதார நிலையானது பெண்களையும் வேலை தேடிச்செல்ல நெருக்குகிறது. இந்நிலையில் பிள்ளைகளுக்குத்தான் பாதிப்பு. அப்படியே, களிப்பு நாடி வீடு திரும்பும் களைத்த கணவனுக்குக் கிடைப்பது? கோபம், கடுஞ்சொல், குழப்பம்!

### 4. பொருளாதார நிலை

பொருளாதார ரீதியில் ஏறத்தாழ உனது தரத்திலேயே உள்ள பெண்ணை மணப்பது சிறந்தது. அதிக வசதியான குடும்பத்திலிருந்து வரும் பெண் உனது வாழ்க்கைத் தரத்திற்கு இறங்கிவரச் சிரமப்படுவாள். வீணான பிரச்னைகள் உருவாகும்.

மணமகன், மணமகள் வீட்டார் மனப்பூர்வமாக ஒருவருக்கொருவர் வெகுமதிகளைக் கொடுத்துக்கொள்வது மெச்சத் தக்கது. தனது மகன் ஈசாக்கின் பெண்ணுக்கு ஆபிரகாம் ஏராளம் நகைகளைத் தனது வேலையாள் மூலம் கொடுத்தனுப்பினார். சபையாகிய தமது மணமகளுக்குக் கிறிஸ்து தமது தந்தையிடமிருந்து வரங்களைப் (gifts) பெற்றளித்தார்;

அப்படியே தமது விண்ணக மாளிகைக்கு அவளை அழைத்துச் செல்ல வெகுமதிகளோடு (rewards) வரவிருக்கிறார்! ஆனால் இந்தியாவிலுள்ள வரதட்சணைப் பழக்கமானது பைபிளுக்குப் புறம்பானது; சட்டத்துக்கு விரோதமானது. *மணப்பெண்கள் தீக்கிரையாக்கப்படவல்ல* என்ற தலைப்பில் வந்த தேசியத் தொலைக்காட்சி நிகழ்ச்சியில், மணப்பெண்கள் பெரும்பாலானோர் தற்கொலை செய்துகொள்வது வரதட்சணைக் கொடுமையினால்தான் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. மட்டுமல்ல, இப்பழக்கத்தில் கையாளப்படும் ரொக்கப் பணமெல்லாம் பெரும்பாலும் கருப்புப் பணம்தான். திருமணச் சந்தையில் கிராக்கியும் பேரமும் பெருத்துள்ளதால் கண்ணீர் சிந்தித் தவிக்கும் பெற்றோரும் பெண்களும் ஏராளம். பழியையெல்லாம் முழுவதுமாக மணமகன் தனது பெற்றோர்மீது போட்டுவிட முடியாது. வசதியில் ஏழ்மையாயிருந்து, விசுவாசத்திலோ செல்வந்தராயிருப்போர் திரளானோர் (யாக்கோபு 2:5). தேவ மக்களாய் அழைக்கப்பட்டோரில் ''பிரபுக்கள் அநேகரில்லை'' என்பது வேதாகம உண்மை (1 கொரிந்தியர் 1:26).

அழியும் ஆத்துமாக்களைக் குறித்த தரிசனமுள்ளோர் திருமண வைபவங்களில் தேவையில்லாத செலவுகளைத் தவிர்க்கவேண்டும். ''இயேசுவும் அவரது சீடரும்'' சூழ்ந்திருக்க, எளிய முறையில், டாம்பீகமில்லாது, வைபவத்தை நடத்துதலே பிரமாதம். விருந்தினருக்குப் போதுமான திராட்சரசம்கூட கொடுக்கமுடியாத அளவு ஒருவேளை ஏழ்மையாயிருந்த மண வீட்டாரிடையே அல்லவா இயேசு தமது மகிமையை வெளிப்படுத்தினார்?

### 5. கலாச்சாரப் பின்னணி

சபையிலும் சமுதாயத்திலும் ஜாதி வேறுபாடு தீராத நோயாயுள்ளது. ''யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்'' (கலாத்தியர் 3:28; ரோமர் 10:12; கொலோசெயர் 3:11).

நமது நாட்டில் திருமணமென்றால் இரு தனி நபர் மட்டுமல்ல, இரு குடும்பங்கள் இணைவதாகும். எனவே, கலாச்சார வேறுபாடுகளால் ஏற்படும் பிரச்னைகளைக் காணாது இருந்துவிட முடியாது. எல்லாரும் மாற்றுக் கலாச்சாரத்திலேயே மணமுடிக்க வேண்டுமென நான் சொல்லுவதில்லை. ஆனால், ஜாதி வேறுபாடு என்ற ஒரே காரணத்தினால் ஒருவரை மணக்க மறுப்பது நிச்சயமாகத் தவறாகும். இதை முற்போக்கு இனத்தவர் என்றழைக்கப்படுவோரின் பின் தங்கிய மனப்பான்மை என்பேன்.

### 6. வயது வித்தியாசம்

ஏவாளைவிட ஆதாம் மூத்தவன்! கீழ்ப்படியவும், சார்ந்திருக்கவும் மனைவிக்கும், நேசிக்கவும், புரிந்துகொள்ளவும் கணவனுக்கும் இது உதவியாயிருக்கிறது. சாராளைவிட ஆபிரகாம் மூத்திருந்தார்; அவள் அவரை ''ஆண்டவனே'' என்றழைத்தாள்! ஒரே வயதாயிருந்தால் பரவாயில்லை; ஆனால் மணமகனைவிட மணமகள் மூத்தவளாயிருப்பது நல்லதல்ல. அப்படியே பெண்ணின் வயது அதிகமாய்க் குறைவாயிருந்தாலும் பிரச்னைகள் உருவாகும். எனது மனைவி என்னைவிட ஒரு வயது மூத்தவள்; இதனால் எங்களுக்கு எப்பிரச்னையும் எழவில்லை.

முப்பது வயதுக்குமுன் வாலிபரும், இருபத்தைந்துக்கு முன் கன்னியரும் மணமுடிப்பது நல்லது. முப்பத்தைந்து வயதுக்குப்பின் பெண்கள் பிள்ளை பெறுவது உசிதமல்ல என்று மருத்துவ ரீதியில் கூறப்படுகிறது. இது ஒரு பொதுவான ஆலோசனை. குடும்பப் பொறுப்புகளின் மிகுதியால் சிலர் பிந்தித்தான் மணமுடிக்க முடிகிறது.

## 7. தேவ சித்தம்

முதல் குறிப்பைத் தவிர மீதியெல்லாம் கர்த்தரின் கட்டளைகளல்ல; ஆனால் அறிவிலும் அனுபவத்திலும் கண்டவற்றின் தொகுப்பாகும். ‘‘என்னிடத்திலும் தேவனுடைய ஆவி உண்டென்று எண்ணுகிறேன்!’’ (1 கொரிந்தியர் 7:40). மேற்குறிப்பட்டுள்ள அத்தனை நிபந்தனைகளையும் நிறைவேற்றும் வாழ்க்கைத் துணையைக் கண்டுபிடிப்பது எப்பொழுதும் சாத்தியமாயிராது. வாலிபரும் நங்கையரும் இக்குறிப்புகளைப் பொதுவான ஆலோசனைகளாக வைத்துக்கொள்ளுங்கள். மூத்த இறைப்பணியாளரான பவுலடியார் இளம் ஊழியன் தீமோத்தேயுவுக்கு எழுதியது: ‘‘நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக்கொள்; கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார்’’ (2 தீமோத்தேயு 2:7).

‘‘உனக்கு விருப்பமான, கர்த்தருக்குட்பட்ட’’ எவரையும் மணந்துகொள்ளத் திருவிவிலியம் உனக்குச் சுதந்திரம் தருகிறது (1 கொரிந்தியர் 7:39). பெண்ணையோ மாப்பிள்ளையையோ யாரும் உனக்குக் காட்டட்டும்; ஆனால் இவரைத்தான் நீ மணக்கவேண்டுமென தேவன் சொல்லுகிறாரென்று யாரும் உனக்குச் சொல்ல விடாதே. இந்தப் பகுதியில் ‘‘தீர்க்கதரிசனம்’’ என்று சொல்லப்படுபவைகளைக் குறித்து எச்சரிக்கை! உன் காரியத்தைக் கர்த்தரிடம் ஒப்படைத்து, அவருக்குக் காத்திரு; அவர் அதை வாய்க்கப்பண்ணுவார். திருமணத்தில் கரத்தைப் பிடிக்குமுன்னால், அல்லது கொடுக்குமுன்னால், இருவரது இதயங்களிலும் முழு நிச்சயம் இருக்கவேண்டும். இது சாதாரண காரியமல்ல — உயிர் வரும், அல்லது போகும்!

தேவையில்லாத கலக்கங்களை அகற்றுங்கள். பெண் தேடி வேலையாள் போயிருக்கையில் ஈசாக்கு ‘‘தியானம்



பண்ண’’ வயல்வெளிகளில் நடந்துகொண்டிருந்தான் (ஆதியாகமம் 24:63). ஒரு நபரை உனக்காகப் பேசும்போது, முக்கிய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டபின், ஒரு சில நாட்களாவது ஜெபித்துக்கொண்டிரு. அந்நபரையும் ஜெபித்துக்கொண்டிருக்கச் சொல். இக்காரியத்தைக் குறித்து உங்கள் இருவரின் உள்ளத்திலும் ஓர் அமரிக்கையும் சமாதானமும் இருக்கிறதா என்று பாருங்கள். ஓரிரு தடவை இருவரும் சந்தித்துப் பேசுங்கள். உணர்ச்சிவசப்பட்டுவிடாதிருங்கள். திருமணத்திற்குமுன் நெருங்கிப் பழகவேண்டாம். பெற்றோர், மூத்தோர் முன்னிலையில் ஜெபித்து நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள். கைபேசி அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்புகொண்டு மணநாளுக்காய், மண வாழ்வுக்காய் ஆயத்தப்படுங்கள்.

மணியடித்ததும் பிந்தாது ஆலயத்திற்கு வந்து சேருங்கள்!

**வாலிபர் நங்கையர் வாசிக்க ...**

**R. ஸ்டான்லி எழுதியது —**

- ☐ *மாணவ மணிகளுக்கு* ... (60 பக்கங்கள்)
- ☐ *எதிர்நீச்சல் வாலிபர்* ... (140 பக்கங்கள்)

**Dr. லில்லியன் ஸ்டான்லி எழுதியது —**

- ☐ *வயது பதினாறிருக்கும்* ... (84 பக்கங்கள்)
- ☐ *வாலிபர் உலகம்* ... (72 பக்கங்கள்)
- ☐ *பசங்க... பொண்ணுங்க...* (120 பக்கங்கள்)

Blessing Youth Mission
8 Church Colony, Vellore 632 006
*Tel: 00 91 416 2242943, 2248943*
*<hq@bymonline.org>*

Irai Noolagam

இறை நூலகம்

வாசிப்போம்! எழுதுவோம்! பகிர்வோம்!